**செய்தி வெளியீடு எண்:124** **நாள் :23.03.2015**

# செய்தி வெளியீடு

மீன்பிடித் தொழிலில் ஈடுபடும், நமது தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் பல்வேறுபட்ட இன்னல்களுக்கும், இடர்பாடுகளுக்கும் உள்ளாகின்றனர். பாக் நீரிணைப் பகுதியில் கடல் எல்லையை கடந்து, மீன்பிடிப்பதாக குற்றம்சாட்டப்பட்டு தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, அந்நாட்டு சிறைகளில் அடைக்கப்படுகின்றனர். இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடைபெறும்போதெல்லாம் தமிழக மீனவர்களை உடனடியாக மீட்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்ததன் காரணமாக சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் அனைவரும் அவர்களது படகுகளும் துரிதமாக விடுவிக்கப்படுகின்றனர்.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் இந்திய – இலங்கை மீனவர்களுக்கிடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தை 27.1.2014 அன்று சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ். வளாகத்திலுள்ள மீன்வளத்துறை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

சென்னையில் 27.1.2014 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தை சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக இலங்கை மீனவ பிரதிநிதிகள் தமிழக மீனவர்களைஅடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கு இலங்கைக்கு வரும்படி அழைப்பு விடுத்ததை ஏற்று, அடுத்தகட்ட

பேச்சுவார்த்தையை இலங்கையில் நடத்திட தீர்மானிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அடுத்த கட்ட பேச்சு வார்த்தை இலங்கையிலுள்ள கொழும்பு நகரில் 12.5.2014ல் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையில் எவ்விதமான முடிவும் எட்டப்படவில்லை.

தொடர்ந்து இருநாட்டு மீனவர்களுக்கிடையேயான மீன்பிடி பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும்பொருட்டு, இந்திய இலங்கை மீனவர்களிடையேயான மூன்றாம் கட்ட இருதரப்பு பேச்சு வார்த்தை வரும் 24.3.2015 அன்று காலை 11 மணியளவில் சென்னையில் நடைபெற தீர்மானிக்கப்பட்டது. மீனவர்களுக்கிடையேயான பேச்சுவார்த்தையில் இலங்கைத் தரப்பில் கலந்துகொள்ளவுள்ள மீனவப்பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளின் பட்டியல் மற்றும் மத்திய அரசு சார்பில் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள வெளியுறவுத் துறை அலுவலர்களின் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

இதற்கிடையில், 22.3.2015 அன்று இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களை சேர்ந்த 54 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிகழ்வினை தமிழக அரசு உடனடியாக மத்திய அரசு மற்றும் இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றது மட்டுமல்லாமல் இம்மீனவர்களை விடுவிக்காத நிலையில் இருநாட்டு மீனவர்களிடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை பயனுள்ளதாக அமையாது என்பதையும் வலியுறுத்தியது. தமிழக அரசு மேற்கொண்ட தொடர்முயற்சியினால் இலங்கை அரசு 54 மீனவர்களையும்

இன்று (23.3.2015) விடுதலை செய்ய முடிவு செய்துள்ளது. நாளை (24.3.2015) காலை தமிழக மீனவர்கள் இலங்கை நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள். இலங்கை நீதி மன்றங்களால் தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற இலங்கை அரசின் உத்தரவாதத்தின் அடிப்படையில் நாளை(24.3.2015) காலை 11 மணிக்கு பேச்சுவார்த்தை துவங்கப் பெறும். அவ்வாறு தமிழக மீனவர்கள் விடுவிக்கப்படவில்லை எனில் பேச்சுவார்த்தை உடனடியாக நிறுத்தப்படும்.

இப்பேச்சுவார்த்தையில், தமிழ்நாட்டின் சார்பாக நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த திருவாளர்கள் கே. சிவஞானம், ஜி. வீரமுத்து, எஸ். சித்திரவேலு மற்றும் எம். ஜெகநாதன், தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த திரு. பி. இராஜமாணிக்கம், புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த திருவாளர்கள் என். குட்டியாண்டி மற்றும் ஜி. இராமகிருஷ்ணன், இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த திருவாளர்கள் ப்பி. ஜேசுராஜா, யு. அருளானந்தம், எம். எஸ். அருள், எஸ்.பி.எஸ். இராயப்பன் மற்றும் என். தேவதாஸ் ஆகியோர் கலந்து கொள்வார்கள். மேலும், புதுச்சேரி யூனியன் சார்பாக திருவாளர்கள் எம். இளங்கோ, இ. தங்கவடிவேல், எஸ். பாஸ்கரன், என். வீரதாசன் மற்றும் பி.செல்வமணி ஆகியோர் கலந்து கொள்வார்கள். இலங்கை மீனவர்கள் சார்பாக திருவாளர்கள் ட்டி. சதாசிவம், எ. ஜஸ்டின் ஜோய்சா, ஜி.வி.எம். ஜெரால்டு, என். பொன்னம்பலம், ப்பி. செந்தில்நாதன், ஜெ. பிரான்சிஸ், டபிள்யு. ஜே. காமிலஸ் பெரைரா,

எ. மரியராசா, கே. ராஜசந்தரம் மற்றும் ப்பி. அந்தோணிமுத்து ஆகிய பிரதிநிதிகளும் கலந்துகொள்கின்றனர்.

இந்த பேச்சுவார்த்தையில் தமிழக அரசின் பார்வையாளர்களாக மாண்புமிகு தமிழக மீன்வளத் துறை அமைச்சர் திரு கே.ஏ. ஜெயபால், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை செயலர் முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., மீன்வளத்துறை ஆணையர் டாக்டர் திருமதி பீலா ராஜேஷ், இ.ஆ.ப., மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் திரு க. ரெங்கராஜு மற்றும் மீன்வளத்துறை அலுவலர்கள், கடலோர பாதுகாப்பு அமைப்புகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள், புதுச்சேரி யூனியனின் பார்வையாளர்களாக மீன்வளத்துறை சிறப்பு செயலாளர் திரு ட்டி. கரிகாலன், மீன்வளத்துறை இயக்குநர் திருமதி ஆர். மேரி சின்னராணி மற்றும் துணை இயக்குநர் திரு என். இளையபெருமாள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கை அரசு பார்வையாளர்களாக , மீன்வள மற்றும் கடல் உயிரினங்கள் துறை தலைவர் எம்.சி.ஐ. பெர்ணாண்டோ, கடல் உயிரினங்கள் துறை இயக்குநர் திரு டி.எஸ். நந்தசேனா, துணை இயக்குநர் திரு டபிள்யு.எஸ்.எல். டிசில்வா, உதவி இயக்குநர்கள் திருவாளர்கள் பி.எஸ். மிராண்டா மற்றும் ரமேஷ் கண்ணா சென்னையிலுள்ள இலங்கை தூதரக துணை தூதர் திரு எம்.கே. பத்மநாதன் மற்றும் தூதரக அமைச்சு ஆலோசகர் டபிள்யு. எம். தர்மபாலா ஆகியோரும் இந்திய அரசு சார்பாக பார்வையாளர்களாக மத்திய வெளியுறவுத் துறை இணைச் செயலாளர் திருமதி சுசித்ரா துரை, ஐ.எப்.எஸ், சென்னையிலுள்ள

வெளியுறவுத்துறை செயலகப் பிரிவை சார்ந்த ட்டி. ஏஞ்சலின் பிரேமலதா மற்றும் இந்திய அரசின் மீன்வளத்துறை சார்பில் மீன்வள மேம்பாட்டு ஆணையர் திரு விஷ்ணுபட் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இப்பேச்சுவார்த்தை சென்னை டி.எம்.எஸ். வளாகத்திலுள்ள மீன்வளத்துறை ஆணையர் அலுவலகத்திலுள்ள கூட்டரங்கில் 24.3.2015 அன்று காலை 11 மணிக்கு நடைபெறும்.

24.3.2015 அன்று நடைபெறும் இந்த பேச்சுவார்த்தையின்போது

(1) தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக் நீரிணைப் பகுதியில் செயற்கையாக வரையறுக்கப்பட்ட எல்லை பாரபட்சமின்றி இருதரப்பு பரஸ்பர நல்லிணக்கத்துடன் மீன்பிடிப்பதற்கான பாரம்பரிய மீன்பிடி உரிமையை வலியுறுத்துதல்.

(2) முந்தைய இந்திய–இலங்கை கலந்தாய்வின் போது ஒப்புக்கொள்ளப்பட்டவாறு, இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் கொடுந்தாக்குதல்கள், சிறைபிடிப்பு மற்றும் சிறைவாசம் மற்றும் இலங்கை அதிகாரிகளால் மீன்பிடிப்படகுகள் / உபகரணங்களை பறிமுதல்செய்தல் மற்றும் முடக்குதல் போன்ற நடவடிக்கைகளை கைவிடுதல்.

(3) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களை அவர்களது படகுகளுடன் விரைவாகவும், சுமூகமாகவும் நாடு திரும்புவதற்கான வழி வகைகள் குறித்து விவாதித்தல்.

(4) பாரம்பரிய கடல் பகுதியான பாக் நீரிணைப் பகுதியில் இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் உகந்த மீன்பிடி முறைகளை தெரிவித்தல்.

(5) முக்கிய தகவல்களான ஆபத்துக்கால நிகழ்வுகள், சுற்றுச்சூழலுக்குகந்த மீன்பிடிப்பு முறைகள் மற்றும் அது தொடர்பான தகவல்களை இருதரப்பினரும் பரிமாறிக்கொள்வதன் மூலம் பாக் நீரிணைப்புப் பகுதியில் மீன் மற்றும் மீன்வளங்களை நீண்டகால வாழ்வாதாரத்திற்கு உகந்த வகையிலும், மீன்பிடிப்பினை சாத்தியமான தொழிலாக மேற்கொள்ளும் வகையிலும் சாத்தியக்கூறுகளை கண்டறிதல்

ஆகிய பொருள்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்படும்.

கச்சத்தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் குறித்து தமிழக அரசு எடுத்துள்ள முடிவின்படி உச்ச நீதிமன்றத்தில் (W.P. Civil No. 561/2008) தொடரப்பட்ட வழக்கிற்கு எவ்வித குந்தகமும் ஏற்படாத வகையில் தமிழக – இலங்கை மீனவப் பிரதிநிதிகளுக்கிடையேயான பேச்சுவார்த்தை நடைபெறும் எனவும், பேச்சு வார்த்தையின் போது நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் தமிழ்நாடு அரசின் ஒப்புதலுக்குப்பின்னரே செயல்படுத்தப்படும் எனவும் தமிழ்நாடு அரசால் மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தை இருநாட்டு மீனவர்களும் தங்களது மீன்பிடித் தொழிலை எவ்வித அச்சமுமின்றி மேற்கொள்ள வழிவகுக்கும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**

செய்தி வெளியீடு எண்:124 நாள் :23.03.2015

# செய்தி வெளியீடு

மீன்பிடித் தொழிலில் ஈடுபடும், நமது தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் பல்வேறுபட்ட இன்னல்களுக்கும், இடர்பாடுகளுக்கும் உள்ளாகின்றனர். பாக் நீரிணைப் பகுதியில் கடல் எல்லையை கடந்து, மீன்பிடிப்பதாக குற்றம்சாட்டப்பட்டு தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, அந்நாட்டு சிறைகளில் அடைக்கப்படுகின்றனர். இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடைபெறும்போதெல்லாம் தமிழக மீனவர்களை உடனடியாக மீட்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்ததன் காரணமாக சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் அனைவரும் அவர்களது படகுகளும் துரிதமாக விடுவிக்கப்படுகின்றனர்.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் இந்திய – இலங்கை மீனவர்களுக்கிடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தை 27.1.2014 அன்று சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ். வளாகத்திலுள்ள மீன்வளத்துறை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

சென்னையில் 27.1.2014 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தை சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக இலங்கை மீனவ பிரதிநிதிகள் தமிழக மீனவர்களைஅடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கு இலங்கைக்கு வரும்படி அழைப்பு விடுத்ததை ஏற்று, அடுத்தகட்ட

பேச்சுவார்த்தையை இலங்கையில் நடத்திட தீர்மானிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அடுத்த கட்ட பேச்சு வார்த்தை இலங்கையிலுள்ள கொழும்பு நகரில் 12.5.2014ல் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையில் எவ்விதமான முடிவும் எட்டப்படவில்லை.

தொடர்ந்து இருநாட்டு மீனவர்களுக்கிடையேயான மீன்பிடி பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும்பொருட்டு, இந்திய இலங்கை மீனவர்களிடையேயான மூன்றாம் கட்ட இருதரப்பு பேச்சு வார்த்தை வரும் 24.3.2015 அன்று காலை 11 மணியளவில் சென்னையில் நடைபெற தீர்மானிக்கப்பட்டது. மீனவர்களுக்கிடையேயான பேச்சுவார்த்தையில் இலங்கைத் தரப்பில் கலந்துகொள்ளவுள்ள மீனவப்பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளின் பட்டியல் மற்றும் மத்திய அரசு சார்பில் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள வெளியுறவுத் துறை அலுவலர்களின் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

இதற்கிடையில், 22.3.2015 அன்று இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களை சேர்ந்த 54 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிகழ்வினை தமிழக அரசு உடனடியாக மத்திய அரசு மற்றும் இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றது மட்டுமல்லாமல் இம்மீனவர்களை விடுவிக்காத நிலையில் இருநாட்டு மீனவர்களிடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை பயனுள்ளதாக அமையாது என்பதையும் வலியுறுத்தியது. தமிழக அரசு மேற்கொண்ட தொடர்முயற்சியினால் இலங்கை அரசு 54 மீனவர்களையும்

இன்று (23.3.2015) விடுதலை செய்ய முடிவு செய்துள்ளது. நாளை (24.3.2015) காலை தமிழக மீனவர்கள் இலங்கை நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள். இலங்கை நீதி மன்றங்களால் தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற இலங்கை அரசின் உத்தரவாதத்தின் அடிப்படையில் நாளை(24.3.2015) காலை 11 மணிக்கு பேச்சுவார்த்தை துவங்கப் பெறும். அவ்வாறு தமிழக மீனவர்கள் விடுவிக்கப்படவில்லை எனில் பேச்சுவார்த்தை உடனடியாக நிறுத்தப்படும்.

இப்பேச்சுவார்த்தையில், தமிழ்நாட்டின் சார்பாக நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த திருவாளர்கள் கே. சிவஞானம், ஜி. வீரமுத்து, எஸ். சித்திரவேலு மற்றும் எம். ஜெகநாதன், தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த திரு. பி. இராஜமாணிக்கம், புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த திருவாளர்கள் என். குட்டியாண்டி மற்றும் ஜி. இராமகிருஷ்ணன், இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த திருவாளர்கள் ப்பி. ஜேசுராஜா, யு. அருளானந்தம், எம். எஸ். அருள், எஸ்.பி.எஸ். இராயப்பன் மற்றும் என். தேவதாஸ் ஆகியோர் கலந்து கொள்வார்கள். மேலும், புதுச்சேரி யூனியன் சார்பாக திருவாளர்கள் எம். இளங்கோ, இ. தங்கவடிவேல், எஸ். பாஸ்கரன், என். வீரதாசன் மற்றும் பி.செல்வமணி ஆகியோர் கலந்து கொள்வார்கள். இலங்கை மீனவர்கள் சார்பாக திருவாளர்கள் ட்டி. சதாசிவம், எ. ஜஸ்டின் ஜோய்சா, ஜி.வி.எம். ஜெரால்டு, என். பொன்னம்பலம், ப்பி. செந்தில்நாதன், ஜெ. பிரான்சிஸ், டபிள்யு. ஜே. காமிலஸ் பெரைரா,

எ. மரியராசா, கே. ராஜசந்தரம் மற்றும் ப்பி. அந்தோணிமுத்து ஆகிய பிரதிநிதிகளும் கலந்துகொள்கின்றனர்.

இந்த பேச்சுவார்த்தையில் தமிழக அரசின் பார்வையாளர்களாக மாண்புமிகு தமிழக மீன்வளத் துறை அமைச்சர் திரு கே.ஏ. ஜெயபால், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை செயலர் முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., மீன்வளத்துறை ஆணையர் டாக்டர் திருமதி பீலா ராஜேஷ், இ.ஆ.ப., மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் திரு க. ரெங்கராஜு மற்றும் மீன்வளத்துறை அலுவலர்கள், கடலோர பாதுகாப்பு அமைப்புகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள், புதுச்சேரி யூனியனின் பார்வையாளர்களாக மீன்வளத்துறை சிறப்பு செயலாளர் திரு ட்டி. கரிகாலன், மீன்வளத்துறை இயக்குநர் திருமதி ஆர். மேரி சின்னராணி மற்றும் துணை இயக்குநர் திரு என். இளையபெருமாள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கை அரசு பார்வையாளர்களாக , மீன்வள மற்றும் கடல் உயிரினங்கள் துறை தலைவர் எம்.சி.ஐ. பெர்ணாண்டோ, கடல் உயிரினங்கள் துறை இயக்குநர் திரு டி.எஸ். நந்தசேனா, துணை இயக்குநர் திரு டபிள்யு.எஸ்.எல். டிசில்வா, உதவி இயக்குநர்கள் திருவாளர்கள் பி.எஸ். மிராண்டா மற்றும் ரமேஷ் கண்ணா சென்னையிலுள்ள இலங்கை தூதரக துணை தூதர் திரு எம்.கே. பத்மநாதன் மற்றும் தூதரக அமைச்சு ஆலோசகர் டபிள்யு. எம். தர்மபாலா ஆகியோரும் இந்திய அரசு சார்பாக பார்வையாளர்களாக மத்திய வெளியுறவுத் துறை இணைச் செயலாளர் திருமதி சுசித்ரா துரை, ஐ.எப்.எஸ், சென்னையிலுள்ள

வெளியுறவுத்துறை செயலகப் பிரிவை சார்ந்த ட்டி. ஏஞ்சலின் பிரேமலதா மற்றும் இந்திய அரசின் மீன்வளத்துறை சார்பில் மீன்வள மேம்பாட்டு ஆணையர் திரு விஷ்ணுபட் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இப்பேச்சுவார்த்தை சென்னை டி.எம்.எஸ். வளாகத்திலுள்ள மீன்வளத்துறை ஆணையர் அலுவலகத்திலுள்ள கூட்டரங்கில் 24.3.2015 அன்று காலை 11 மணிக்கு நடைபெறும்.

24.3.2015 அன்று நடைபெறும் இந்த பேச்சுவார்த்தையின்போது

(1) தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக் நீரிணைப் பகுதியில் செயற்கையாக வரையறுக்கப்பட்ட எல்லை பாரபட்சமின்றி இருதரப்பு பரஸ்பர நல்லிணக்கத்துடன் மீன்பிடிப்பதற்கான பாரம்பரிய மீன்பிடி உரிமையை வலியுறுத்துதல்.

(2) முந்தைய இந்திய–இலங்கை கலந்தாய்வின் போது ஒப்புக்கொள்ளப்பட்டவாறு, இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் கொடுந்தாக்குதல்கள், சிறைபிடிப்பு மற்றும் சிறைவாசம் மற்றும் இலங்கை அதிகாரிகளால் மீன்பிடிப்படகுகள் / உபகரணங்களை பறிமுதல்செய்தல் மற்றும் முடக்குதல் போன்ற நடவடிக்கைகளை கைவிடுதல்.

(3) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களை அவர்களது படகுகளுடன் விரைவாகவும், சுமூகமாகவும் நாடு திரும்புவதற்கான வழி வகைகள் குறித்து விவாதித்தல்.

(4) பாரம்பரிய கடல் பகுதியான பாக் நீரிணைப் பகுதியில் இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் உகந்த மீன்பிடி முறைகளை தெரிவித்தல்.

(5) முக்கிய தகவல்களான ஆபத்துக்கால நிகழ்வுகள், சுற்றுச்சூழலுக்குகந்த மீன்பிடிப்பு முறைகள் மற்றும் அது தொடர்பான தகவல்களை இருதரப்பினரும் பரிமாறிக்கொள்வதன் மூலம் பாக் நீரிணைப்புப் பகுதியில் மீன் மற்றும் மீன்வளங்களை நீண்டகால வாழ்வாதாரத்திற்கு உகந்த வகையிலும், மீன்பிடிப்பினை சாத்தியமான தொழிலாக மேற்கொள்ளும் வகையிலும் சாத்தியக்கூறுகளை கண்டறிதல்

ஆகிய பொருள்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்படும்.

கச்சத்தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் குறித்து தமிழக அரசு எடுத்துள்ள முடிவின்படி உச்ச நீதிமன்றத்தில் (W.P. Civil No. 561/2008) தொடரப்பட்ட வழக்கிற்கு எவ்வித குந்தகமும் ஏற்படாத வகையில் தமிழக – இலங்கை மீனவப் பிரதிநிதிகளுக்கிடையேயான பேச்சுவார்த்தை நடைபெறும் எனவும், பேச்சு வார்த்தையின் போது நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் தமிழ்நாடு அரசின் ஒப்புதலுக்குப்பின்னரே செயல்படுத்தப்படும் எனவும் தமிழ்நாடு அரசால் மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தை இருநாட்டு மீனவர்களும் தங்களது மீன்பிடித் தொழிலை எவ்வித அச்சமுமின்றி மேற்கொள்ள வழிவகுக்கும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**